# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1712/21 - 2011 ජූනි 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.30

*1712/21 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 36/57*

**1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கடற்றொழில் மற்றும் நீர்வாழுயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகிய நான் "இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்" என அறியப்படும் கூட்டுத்தாபனத்தைத் தாபித்து மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் (2)ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1964, ஒற்றோபர் 1 ஆந் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, அத்தகைய கட்டளையின் (v) என்னும் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலம் திருத்துகின்றேன்.

" (v) பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்:-

(அ) சர்வதேசச் சட்டத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பிரத்தியேகப் பொருளாதார வலயத்தினுள்ளும் அதற்கப்பாலும் மீன்பிடித்தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.

(ஆ) மீனைப் பதப்படுத்துதல்;

(இ) வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சந்தைகளில் மீனைச் சந்தைப்படுத்தல்;

(ஈ) அவ்வாறு தேவைப்படுவதாகத் தோன்றுகின்றவிடத்து மீனினதும், மீன் உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்;

(உ) மேற்சொல்லப்பட்ட செயற்பாடுகளில் எதனையும் நிறைவேற்றுவதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

ஆயின், அத்தகைய உடன்படிக்கைகள், அரசாங்கக் கொள்கைக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேசச் சந்தை விதிகளுக்குமிணங்க பாவனையாளர்களுக்கு நியாயமான விலையொன்றில் மீன் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும், அத்துடன் இந்நோக்கத்துக்காக வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம், நிதியமைச்சின் மற்றும் திட்ட அமுலாக்கல் திணைக்களம் என்பவற்றின் முதலீட்டாளர்களுடனான செயற்பாடுகளில் ஈடுபடும்போது எதுவிதத்திலும் இலங்கையின் தேசிய நலன்மீது பாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருத்தலாகாது.

ஆயின், மேலும், உள்ளூர் மீனவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக ஏதேனும் அத்தகைய கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கையின்கீழ் மீன்பிடி நடவடிக்கைகள் பிரத்தியேகப் பொருளாதார வலயத்துக்கு அப்பால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களையும் விநியோகத்தர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துதல்.".

இக்கட்டளையின் விடயம் (V) இன் நோக்கங்களுக்கு "பிரத்தியேகப் பொருளாதார வலயம்" என்பது 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கடற்றுறை வலயங்கள் சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தினால் இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயமாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பு எனப் பொருள்படும்.

கலாநிதி ராஜித சேனாரத்ன,
கடற்றொழில் மற்றும் நீர்வாழுயிரின வளங்கள்
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2011, யூன் 29.*

*7-387*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.